செ.வெ.எண்.152 நாள்.08.03.2018.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மூன்று மாவட்ட குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர்களுக்கு மண்டல அளவிலான ஆதார் எண் பதிவு பயிற்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) / மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம் அவர்கள் துவக்கி வைத்தார்.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மூன்று மாவட்ட குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர்களுக்கு மண்டல அளவிலான ஆதார் எண் பதிவு பயிற்சி முகாம் இன்று (08.03.2018) நடைபெற்றது. இப்பயிற்சி முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) / மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம் அவர்கள் துவக்கி வைத்தார்.

முகாமில், மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) / மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் பேசியதாவது—

மகளிர் தினத்தன்று இப்பயிற்சி நடைபெறுவது சிறப்பான ஒன்றாகும். அனைவருக்கும் மகளிர் தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். குடும்பத்தில் மகளாக, மனைவியாக, அம்மாவாக பல்வேறு பொறுப்புகளை ஏற்று, குடும்பத்தை பாதுகாப்பது பெண்கள் தான். குழந்தைகளின் கல்வி மற்றும் ஒழுக்கத்திற்கு தாயின் பங்கு மகத்தானதாகும். பெண்கள் உயர்கல்வி வரை கண்டிப்பாக படிக்க வேண்டும். படித்தால் தான், தன்னம்பிக்கை வளரும். இன்று மண்டல அளவிலான ஆதார் பதிவு பயிற்சி அளிக்கப்படுகிறது. 0 முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளை ஆதார் பதிவு செய்ய உங்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியை நல்ல முறையில் பயன்படுத்தி, குழந்தைகளுக்கு ஆதார் எண் வழங்கும் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திட வேண்டுமென பேசினார்.

இப்பயிற்சி முகாமில், திருநெல்வேலி மாவட்ட குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி.ஜெயசூர்யா, புள்ளியியல் ஆய்வாளர் திரு.சண்முகசுந்தரம், Unique Identificontion Authority of India, அப்ளிகேசன் அனலைசர் திரு.கார்த்திகேயன், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைச் சார்ந்த வட்டார அளவிலான குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.